சலுகைகள் வழங்கப்படுவது வழக்கமான ஒன்று. குறிப்பாக, காவிரி டெல்டா பகுதியாக இருக்கின்ற தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்கள் மிகப் பெரிய வறட்சிக்கு இலக்காகி பாதிக்கப்பட்டன. அதற்கான வகையிலே, நம்முடைய அரசும் நில வரி தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கி, கடன் சலுகைகளையும் செய்து, மகத்தான சாதனை படைத்திருக்கிறது. அப்படிச் சாதனை படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்--வறட்சியால் பாதிக்கப்பட்டு, குத்தகை செலுத்த இயலாத நிலையிலே விவசாயிகள் இந்த ஆண்டுகளிலே இருக்கிறார்கள்; இது தனியார் நிலங்களிலேயும் இருக்கிறது; கோயில் மடத்து நிலங்களிலேயும் இருக்கிறது; அதனால் நில வெளியேற்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது--அந்த நில வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான முயற்சியையும், வறட்சிக் காலங்களிலுள்ள குத்தகையைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, அந்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குத்தகைப் பாக்கி சம்பந்தமாக, வெள்ளம், வறட்சி ஏற்பட்ட காலங்களிலே சலுகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர், திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

கோட்டாட்சியர் அலுவலகம்

***2028 திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிபட்டி வட்டங்களை உள்ளடக்கி, அரூரில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2006 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.*

முற்பகல் 9–50

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுபட்ட மாவட்டமான தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி, தருமபுரி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நான்கு ஆண்டுக் காலம் முடிந்தது. ஐந்து வட்டங்கள் உள்ளடக்கிய தருமபுரியில், ஒரே ஒரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் மட்டுமே உள்ளது. ஏறக்குறைய, 14 இலட்சம் மக்கள் தொகை கொண்ட அந்த மாவட்டத்திற்கு, ஒரேயொரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்தான் உள்ளது. அங்கு ஃபைல்கள் என்பது, ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் ஆன மனுக்கள்கூட இன்றைக்கும் அப்படியே தேங்கியுள்ளன. தமிழக அரசு, ஒரு கோட்டத்தை, உட்கோட்டத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அது விதித்திருக்கக்கூடிய பல்வேறுபட்ட அம்சங்களில், நான் குறிப்பிட்டுள்ள இடம் அதற்கு ஏதுவாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.*

ஏறக்குறைய, 2500-க்கும் மேற்பட்ட சதுர கிலோ மீட்டர் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது அந்தப் பகுதி. அதேபோல, இரண்டு தாலுகாக்கள் இருக்க வேண்டும்; அரூர், பாப்பிரெட்டிப்பட்டி என இரண்டு தாலுகாக்கள் உள்ளன. 5 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் தொகை உள்ளது. 50 கிலோ மீட்டர் தூரம், 100 கிலோ மீட்டர் தூரம் சென்று, ஏறக்குறைய 7, 8 மணி நேரம் பயணம் செய்தால்தான், வருவாய்க் கோட்டாட்சியரைச் சந்திக்க வேண்டும் என்ற நிலைமையில், கடந்த 10, 20 ஆண்டுக் காலமாக, அந்த மக்கள் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இரண்டு வட்டங்களை மையப்படுத்தி, அரூரிலே கோட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு முன்வர வேண்டும். மாவட்ட நிர்வாகத்தால்கூட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, இடத்தைக்கூட பார்ப்பதற்காகச் சில ஆலோசனைகள், அந்தச் சம்பந்தப்பட்ட துறையிலே நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இருப்பினும், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அதற்கான வாய்ப்புக் கிடைக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2006 ஆகஸ்ட் 23

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களை இணைத்து, அரூரில் கோட்டம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, நீண்டநாட்களாக அது அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். 2003 ஆம் ஆண்டு ஜுன் மாதம், அரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்டம் அமைக்க வேண்டுமென்று, மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. அதேநேரத்திலே, 2004 ஆம் ஆண்டு, நம்முடைய மத்தியத் தேர்தல் கமிஷனுடைய எல்லை வரையறை ஆணையம் விதித்திருக்கிற தடை இருக்கின்ற காரணத்தால்தான், அது தற்சமயம் நிலுவையிலே இருக்கின்றது. வருகின்ற காலத்திலே, அதுபற்றி அரசு கண்டிப்பாகப் பரிசீலித்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதியில், இலுப்பூரில் செயல்பட்டுவரும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் இருக்கும் இடத்தில், சார்பதிவாளர் அலுவலகம் இல்லை. 30 கிலோ மீட்டர் தூரம் தள்ளியுள்ள கீரனூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றுவருவதற்கு, பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டுவரும் இலுப்பூரிலேயே, புதிதாகச் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்திட அரசிடம் நடவடிக்கை உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பதிவுத் துறை அமைச்சருக்குத் தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலுள்ள திருப்போரூரை மையமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுமா? காரணம், இந்தத் தொகுதியில் செங்கல்பட்டில் மட்டும்தான் வட்டாட்சியர் அலுவலகம் உள்ளது. திருப்போரூர் தொகுதியிலுள்ளவர்கள், 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செங்கல்பட்டிற்குச் செல்ல

2006 ஆகஸ்ட் 23]

வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு நேரமும், பணமும் விரயமாகிறது. எனவே, ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் வசிக்கிற இடத்தில், திருப்போரூரை மையமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, எல்லை வரையறை ஆணையத்தினுடைய தடை நீக்கப்பட்டவுடனே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எல்லாம் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 75. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

குளம் சீரமைத்தல்

***434—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியிலுள்ள அருள்மிகு ஹரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில் குளத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சிறப்பு ஊராட்சித் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், மதிப்பீட்டுத் தொகை ரூ.25.50 இலட்சத்தில் அருள்மிகு ஹரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில் குளத்தினைச் சீரமைக்க, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், குளத்தினைச் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–55

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலம் நெருங்குகிறது. கடந்த காலத்தில் புரட்சித் தலைவி